# ஆர். சூடாமணியின் 'நாகலிங்க மரம்' சிறுகதை உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

24

**இரா. குமரகுருபரன்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்),
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,
577 அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600015.
**மின்னஞ்சல் முகவரி** vinci.illustrator@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆண் எழுத்தாளர்களுக்கு நிகரான இலக்கியப்படைப்புகளை உருவாக்கிய பெண் எழுத்தாளர் ஆர்.சூடாமணியின் 'நாகலிங்க மரம்' வலுவான பெண் எழுத்து ஆகும். பெண் எழுத்து விளக்கம், பெண் வீட்டில் வழக்கமாக நடைபெறும் வரன் பார்த்தலில் ஏற்படும் நுட்பமான விவாதங்களை முன்வைக்கிறது. பெண்ணிடம் அனைத்து நற்குணங்கள், நடுத்தர வர்க்கத்திலுள்ள பெண் வீட்டாரிடம் செல்வ வளம் எதிர்நோக்கி நிற்கும் பிள்ளை வீட்டாரின் ஆதிக்க மனோபாவம் , திருமணத்திற்கு முன்பு நிகழும் வியாபார பேரம் மென்மையான இரு உள்ளங்களை இணைப்பதற்கு தடைக்கற்களாக இருப்பதை உணர்த்தும் அவலம் நிறைந்த கதை . பெண்ணியக் கூறுகளை நுட்பமாக உள்ளடக்கிய கதை இது.

**திறவுச் சொற்கள்**

***'நாகலிங்க மரம்' - பெண் பார்க்கும் படலம் - பெண் கல்வி - பெண் நிறம் - வரதட்சிணை பேரம்***

## 1. *முன்னுரை*

ஆண் எழுத்தாளர்களுக்கு நிகரான படைப்புகளை வழங்கியவர் எழுத்தாளர் ஆர். சூடாமணி. அழகியல் ரீதியாக எழுதுவது பெண்களுக்கு சாத்தியமில்லை என்ற கருத்தியலைக் குலைத்துப் போட்டபடியே பயணித்த தமிழ் இலக்கியப் படைப்பாளி சூடாமணி.

பெண் பார்க்கும் படலம்தான் இந்தக் கதையின் மையம் . முந்தைய இருபதாம் நூற்றாண்டின் பெரும்பாலான சிறுகதைகளின் பேசுபொருளாக இருந்தது வரதட்சிணைக் கொடுமைதான்.

இந்தச் சிறுகதையின் சிறப்பே , ஆணாதிக்க சமூகத்தை சூடாமணி நுட்பமாகச் சாடிய முறைமைதான் . ஆதிக்கப் பாத்திரங்கள் கூக்குரல் இடாமலே தக்க வைத்துக் கொள்ளும் தமது இருத்தலை , பெண் எழுத்து எப்படி விவாதித்து வெல்கிறது என்பதுதான் உள்ளடக்கம் . வரதட்சிணைக் கொடுமை இரு இளம் உள்ளங்களின் மென்மையைப் புரிந்து கொள்ளாது வியாபாரமாகிற அவலத்தை உணர்த்துகிறது.

## 2. *பெண் எழுத்து - விளக்கம்.*

பெண் எழுத்தை விளக்கும் கூறுகளாக பலவற்றைப் பட்டியலிடும் இரா. பிரேமா,

- எழுத்துக் கூச்சமின்மை என்பது பெண் எழுத்திற்குத் தேவையான ஒன்று . உள்ளதை உள்ளபடி கூற எழுத்துக் கூச்சமின்மை வேண்டும். பெண் எழுத்து என்பது கற்பிக்கப் பட்டது அன்று. தன் சொந்த அனுபவத்தை வெளிப்படுவதாக அமைய வேண்டும்.
- சமூகத்திற்காக அஞ்சி அஞ்சி வாழ்ந்த வாழ்க்கை போதும். இனி, " நான் எனக்காக , என் இனத்திற்காக , என் சகோதரிகளுக்காக வாழ வேண்டும் " என்ற உணர்வை மையமிட்டதாக அமையும்.

(ப. 889, பெண்ணியம்: அகலமும் ஆழமும்)

என்ற கூறுகளை மையப் படுத்துகிறார் . இது ஆர் .சூடாமணியின் கதைக்குப் பொருந்துகிறது . வாழ்வியல் நடப்புகளை பாத்திரங்கள் மூலம் உரக்கக்கூறி பெண்ணியத்தை வென்றெடுக்கிறது.

### *3. பெண் வீட்டார், பிள்ளை வீட்டார் ஏற்றத் தாழ்வு*

பிருந்தாவைப் பெண் பார்க்க வரும் மாப்பிள்ளை வீட்டாரில் மாப்பிள்ளையும் அவனது பெற்றோரும் இடம் பெறுகின்றனர் . மணப்பெண்ணை அலங்கரித்து அவள் மூலம் காப்பி கொடுத்து மாப்பிள்ளை வீட்டாரை உபசரிப்பது வழக்கம் . அதன் பின்னர் மாப்பிள்ளை வீட்டாருக்குப் பிடித்திருந்தால் இதர 'லௌகிக விஷய' நடவடிக்கைகள் தொடரும். இது இப்போதும் பெருமளவில் மாப்பிள்ளை பார்த்தலில் காணலாகும் பொதுவான 'பண்புக்கூறு'.

- " பிருந்தா! காப்பி கொண்டாம்மா "

  பிருந்தா காப்பி கொண்டு வந்தாள்.

  "இவதான் பிருந்தா." நன்றாய் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதை அந்தத் தொனி சொல்லியது.

என்று சூடாமணியின் நக்கல் தொடக்கத்திலேயே பதிகிறது. *பெண் வீட்டார் தாழ்நிலையிலும் பிள்ளை வீட்டார் உயர்நிலையிலும் இருப்பதான அதிகாரத் கட்டமைப்பு அது.*

### *4. பெண் நிறம்*

'பெண் சிவப்பில்லை. மாநிறம்தான் ஆனால் மாநிறச் சிலை . ஒன்றுக்கொன்று சவால் விடும் முகமும் உடலும். சராசரிக்கு மேற்பட்ட உயரம் . ஈயை விரட்டுவது போல் வறுமையை ஒதுக்கிக் கொண்டு அநாயசமாய் சுடர் விடும் கம்பீரம்' என்பதாக பிருந்தாவின் சித்திரிப்பு இருக்கிறது.

வந்தவர்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணச் சொல்லி பெண்ணின் பெற்றோர் கூறுவது வழக்கம்

- " உக்காரும்மா!" என்றார் பிள்ளையின் தந்தை …

  பிள்ளையின் தாய் தன் கணவனை இரகசியமாய் முறைத்துப் பார்த்தாள் . அவள் இருக்கும்போது அவர் என்ன உட்காரச் சொல்லக் கிடக்கிறது பெண்ணை ! அந்தப் பெண்ணும் உடனே உட்கார்ந்து விட்டதே."

என்னுமிடத்தில் சமூக எள்ளல் தொனிக்கிறது.

ஆணாதிக்கச் சிந்தனை பெண்ணுக்குள்ளும் ஊடுருவி அவளையும் ஆட்டுவிக்கிறது என்பதையும் மாமியார்க்காரியின் அதிகாரத்தனம் தன் கணவரின் பரிவால் நீக்கப்பட்டு விடுமோ என்ற அச்சவுணர்வு பீடிப்பதையும் உளவியல் சிந்தனை வழியாகப் படம் பிடிக்கிறார் சூடாமணி.

5. ***பெண் கல்வி***

பெண்ணின் படிபபு குறித்து பெண்ணிடமே கேள்வி கேட்கிறாள் பையனின் தாயார். ("...ஏண்டியம்மா நீ என்ன படிச்சிருக்கே? " ) இப்போது மாமியாரின் அதிகாரம் கோலோச்சுகிறது.

தரகர் இந்த விஷயங்களையெல்லாம் சொல்லவில்லையா ? என்றவாறே நினைத்தபடி அவர்களிடம் , " எய்த் ஸ்டாண்டர்டோட நிறுத்திட்டோம் அவளை " என்று தீனக்குரலில் சொல்லும் பெண்ணின் தகப்பனாரை இலட்சியம் செய்யாதபடி அடுத்த அம்பு பாய்கிறது... "ஏன், படிப்பு ஏறல்லையா?"

6. ***ஏழைமைச் சித்திரிப்பு***

'பிருந்தா அதி தீவிரமாய் மரத்தைப் பார்த்தாள்' என்றபடி நாகலிங்க மர அழகு விவரணைகள் சொல்லப் படுகின்றன.படிப்பில் சூடிகையான பிருந்தா மேலும் படிக்க ஆசைப் பட்டாலும் வசதியில்லாததால் நிறுத்தப் பட்டதை அவள் தந்தை கூறுவதைக் கேட்டு "இலவசப் படிப்புதானே! வசதி எதுக்கு?" என்ற சம்பந்தியம்மாளிடம் தமது வீட்டுநிலையான மனைவி உடல்நிலை, ஊர்ஊராய்ச் சுற்றும்படியான தமது மருந்து விற்பனைப் பணி குறித்து விரிவாக எடுத்துரைக்கிறார்.

தமது கணவர் , வரப் போகும் மருமகளைப் பரிவுடன் அமரச் சொல்லும்போது எரிச்சலடையும் சம்பந்தியம்மாளுக்கு பெண்ணின் தாயார் பதில் கூறியிருந்தால் ஓரளவிற்கு நியாயமுண்டு . ஆனால் அவர் பேசவேயில்லை! அதுதான் சமூக வழக்கத்தில் விதிக்கப்பட்டது.

இச்சூழலில் அதிகாரப் படிநிலைகள் குறித்து அறிய வருகிறோம். மணமகன் வீட்டாரில் மாமியார்க்காரி முதலிடம். அடுத்ததாக, சம்பந்தியம்மாள் ஆதிக்க வரையறைக்குள் வரும் மாமனார் , தாழ்நிலையில் அடக்கி வாசிக்கும் பெண்ணின் பெற்றோர் ; குறிப்பாக, வாயே திறவாது மனதிற்குள் உரையாடும் பெண்ணின் தாயார் வருகின்றனர் . எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டுத் தொடர இயலாத பெண்ணின் கல்வி குறித்து , வெகுளியான மாப்பிள்ளைப் பையன் 'அது ஒண்ணும் பரவாயில்லை . ஸ்கூலுக்கு போய்ப் படிச்சாத்தானா ?' என்று பரிந்து பேசுவதைத் தாளாது கோபத்தில் சிவந்த பையனின் தாயார்க் காரி 'அட...அசட்டு முண்டமே' என்பது போல சங்கடத்துடன் பார்த்தவாறு , " இந்த நாளில் பி .ஏ. கூட சாதாரணமாயிருக்கிறபோது ஸ்கூல் படிப்பையே முடிக்கலேன்னா ஆச்சரியம்தானேடா?" என்கிறாள்.

பெண்ணின் தாயார் பேசாமடந்தையாக அமர்ந்து , தரகர் எல்லாவற்றையும் கூறியபின்னும் 'படிப்பு ஏறவில்லையா?' என்று சம்பந்தியம்மாளின் குதர்க்கமான பேச்சிற்கு மறுபேச்சுப் பேசாமல் குமைந்து மறுகுகிறாள். தன் கணவர் பெருமிதத்துடன் மகள் காப்பி , போண்டா, ரவாகேசரி பண்ணியதாகக் கூறும்போது மகளை உற்றுநோக்கினால் தாம் உடைந்து அழுதுவிடுவோமோ என்று பாராமுகமாக இருக்கிறாள்.

7. ***பெண் மொழி***

நாகலிங்க மரத்தின் சௌந்தரியத்தில் லயித்து நிற்கும் பிருந்தாவிடம் , "பொண்ணு என்ன பேசவே காணோம் ? ஏண்டியம்மா, அப்படி என்ன வெறிச்சுப் பாத்துண்டிருக்கே அங்கே ?" என்று பிள்ளையின் தாய் கேட்கிறாள்.

நாகலிங்க மரத்தின் மீதான பார்வையை அகற்றாமலேயே "என்ன பேசறது?" என்று கூறியபடி,

- " இந்த மரத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா ? வருஷத்துல மூணு தடவையாவது இதுக்கு இலையுதிர் காலம் வரது .நாலஞ்சு நாள் சருகெல்லாம் அப்படியே காத்தில் உதிர்ந்து விழுந்துண்டே இருக்கும் . கீழேயெல்லாம் குவிஞ்சு போயிடும் . குப்பை பெருக்கி மாளாது . அப்புறம் அடுத்த நாலஞ்சு நாளுக்குள்ளேயே , நாம் பாத்துண்டிருக்கறபோதே , கபகபன்னு பச்சையா இலைகள் மொளைச்சு அப்படியே மரத்தை நெறைச்சிடும்! இந்த மரமா மொட்டையா இருந்துதுன்னு ஆச்சரியமாயிருக்கும் ! சருகுகள் ஆடி ஆடி உதிர்ந்துண்டிருக்கறபோதே பக்கத்திலேயே பச்சை பச்சையா சின்னச் சின்னதா துளிர் விட்டிருக்கறதைப் பார்க்க எத்தனை அழகாயிருக்கும் தெரியுமா ? என்னமோ பழைய மரத்துக்குள்ளேருந்தே தோல் உரிச்சுண்டு புதுமரம் கிளம்பறாப்பல இருக்கும்."

  பிள்ளை பெண்ணை மிக சந்தோஷத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் . பெண்ணின் தந்தை , பிள்ளையின் தாய் இருவருமே இதைக் கவனித்தார்கள்.

என்பதாக வளரும் கதையை இப்படியே சுபமாக முடித்திருக்கலாம்தான். ஆனாலும் தொடர்கிறது.

### *8. திருமண வியாபாரம்*

" கொஞ்சம் கூடப் பிகுவே தெரியவில்லையே பாவிப் பயலுக்கு ! கண் பிதுங்கி விழப் போறதுடா !..." என்று மகன் மீது எரிச்சல் அடையும் சம்பந்தியம்மாள் பிருந்தாவிடம் , டிபனைத் தாண்டி 'சமையல் பண்ணத் தெரியுமா ?' என்று வினவுகிறாள் ; சமையல்காரி சம்பளம் மிச்சம் அல்லது தனக்கு சமையற்கட்டிலிருந்து விடுதலை என்ற சுயலாபம்தான் காரணம்.

இந்நிலையில், தரகர் சொன்ன மாதிரி சந்தடி சாக்கில் பிருந்தாவின் சகோதரனான , தமது பையனின் கல்லூரிப் படிப்புக்கும் மாப்பிள்ளை வீட்டார் உதவினால் நன்றாக இருக்கும் என்று பெண்ணின் தந்தை வாய்விட்டுக் கேட்க அதிர்ச்சி அடைகிறார்கள் மாப்பிள்ளை வீட்டார் . கூடவே மாப்பிள்ளை வீட்டார் என்ற திமிரும் தலைதூக்குகிறது. 'போனால் போகிறது ஏழாயிரம் வரதட்சிணை என்று பேசியதே தயவுபண்ணித்தான் ' என்ற தோரணையுடன் மீண்டும் பெண்ணின் குடும்பத்தை அவமதிக்கின்றனர்.

- " பிள்ளையைப் பெத்தவா ஒவ்வொருத்தர் பத்தாயிரம் கொண்டா இருபதாயிரம் கொண்டான்னு கேப்பா. நாங்க ஏதோ போனாப் போறதுன்னு ஏழாயிரத்துக்கு ஒத்துண்டோம். "
- 'அந்த ஏழாயிரம் எங்களுக்கு எழுபதாயிரத்துக்குச் சமம்' என்று கதறுகிறார் பெண்ணின் தந்தை.
- "கொடுக்கிற பணத்தை இந்த வழியில் திரும்ப வாங்கினுட்டா பிள்ளை வீட்டுக்காரா எங்களுக்கென்ன மிஞ்சறது?"

மாப்பிள்ளை விற்பனை வியாபாரம் களை கட்டுகிறது!

- " படிப்பு கிடையாது . அதுக்கே இன்னும் ஒரு மூவாயிரம் சேர்த்துக் கொடுக்கலாம் நீங்க , " என்றாள் பிள்ளையின் தாய்.
- "ஆனா அவ காரியமெல்லாம் எப்படி இருக்கு ? அதுக்கு நீங்க ஒரு ரெண்டாயிரம்

குறைச்சுக்கலாமே?"

- "என்ன காரியமோ போண்டா ஒரே காரம். காப்பியில பொடி வாசனை அடிக்கறது. பத்தாயிரம் இல்லாம ஒரு கல்யாணமா? ஏதோ நாங்க போனாப் போறதுன்னு..."
- "கிளியாட்டம் பொண்ணு கிடைக்கிறதொண்ணே எத்தனையோ பத்தாயிரம் பெறுமே!"
- பொண்ணு ஏதோ பார்க்கக் கொஞ்சம் சுமாராயிருப்பாள்னு தரகர் சொல்லியிருந்ததால்தான் இந்த 'சீப் ரேட்டுக்கு' ஒத்துண்டோம்.

என்பதாகக் கூச்சநாச்சமில்லாது வாழ்க்கை ஒப்பந்தம் வியாபாரமாகிறது இங்கு.

9. ***'ஆண்' தகுதி***

பெண்ணின் தந்தை வரதட்சிணைப் பணத்தைக் குறைக்க பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்.

- "பெண்ணின் தந்தை பிள்ளையின் பக்கம் ஒரு பார்வை பார்த்தார். 'இந்தப் பிள்ளைக்கா?' என்று வாயால் கேட்கவில்லை .ஆனால் பிள்ளை கணப் பொழுதில் முகம் சிவந்து வலது காலை வேஷ்டிக்குள் இழுத்துக்கொண்டான். அவன் பெற்றோரும் சட்டென்று மௌனமானார்கள். பெண்ணின் தந்தை சிரித்தவாறே , நமக்குள் இந்தத் தர்க்கமெல்லாம் எதுக்கு சொல்லுங்கோ . இருக்கிற விஷயத்தை தரகர் ரெண்டு தரப்புக்குமே சொல்லியிருக்கார் இல்லையா?"

என்கிறார். பெண் சர்வலட்சணம் பொருந்திய பொன்னிறத்தவளாக , கல்வியில் கலைமகளாக , சீர் கொண்டுவரும் லட்சுமிகரமானவளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஆணாதிக்க சமூகம் , ஆண்பிள்ளையிடம் இத்தகைய பண்புகளை எதிர்பார்க்கத் தேவையில்லை என்பதாகக் கட்டமைக்கப்பட்டு விட்டது.

'அகிலீஸ் ஹீல் / டென்டன்' (Achilles tendon) என்ற பதத்திற்கான கிரேக்க புராணக் கதையை நினைவுபடுத்துகிற மாதிரியான பலவீனம்! இதுவே, கதையின் திருப்பமாக அமைகிறது!

- குதிகால் ஆடுதசையை இணைக்கும் வலுவான தசை , விளையாட்டு வீரர்களுக்கு இறுகிப் போய் செயலற்றதாக ஆக்கிவிடும். கிரேக்க புராணத்தில் வரும் பீலியஸ் மனைவி தீட்டிஸ், தன் மகன் அகிலீஸ் குதிகாலைப் பிடித்து ஸ்டைக்ஸ் ஆற்றில் முழுக்காட்டி யாரும் வெல்லற்கரிய பலம் பெறவைக்கிறாள். ஆனால் அவள் கரங்களால் பற்றிய அகிலீஸின் குதிகால் பகுதி ஈரம் படியாமல் உலர்ந்திருந்ததால் மாவீரனான அவனது பலவீனமான பகுதியாக அவனது குதிகால் ஆகிவிடுகிறது. இறுதிகட்டத்தில் பாரீஸ் அவனது குதிகாலைக் குறிவைத்து எறிந்த அம்பினால் அகிலீஸ் கொல்லப்பட்டதாக ஹோமருக்குப் பிந்தைய புராண இலக்கியங்கள் கூறுகின்றன.

(பக். 6 & 7, Dictionary of Phrase & Fable)

எதிராளியின் பலவீனமான பகுதியில் தாக்குவது என்பதாக 'அகிலீஸ் டென்டனுக்கு ' சமகாலத்தில் பொருள் கொள்ளப்படுகிறது.

இதுவரை அதிகாரம் செலுத்திவந்த பிள்ளைவீட்டார் தட்டு தாழ்ந்து, பெண் வீட்டார் உச்சத்தில் நிற்கும் நிலை ஏற்படுகிறது . பெண்ணின் தந்தை பிள்ளையின் கால் ஊனத்தை சொற்களால் கூறிக் காயப்படுத்தாமல் குறிப்பாக உணர்த்தும் விதமாகக் கண்களால் சீண்டுகிறார். இருபக்கமும் குறைபாடு

(ஒன்று ஏழ்மை ; மற்றொன்று உடல் ஊனம் ) இருப்பதைத் தரகர் வெளிப்படுத்தியது குறித்து பெண்ணின் தந்தை பிள்ளை வீட்டாரிடம் நினைவூட்டுகிறார்.

விஷயம் மேலும் அலசப்படுவதை விரும்பாது , பேச்சு வார்த்தையை முடிக்க விரும்பிய பிள்ளை வீட்டாருக்கு பெண்ணின் சகோதரனின் படிப்புக்கு வேண்டப்படும் உதவி 'பித்தலாட்டம்' ஆகத் தோன்றுகிறது. இப்போது பெண் வீட்டாரின் கடைசி அஸ்திரம் பாய்கிறது.

- "உங்க பிள்ளைக்கு நிறைய இடங்களில் தட்டிப் போய்விட்டதாக தரகர் சொன்னார்" என்றார்.

வரன் தேடல் வைபவம் தமது வீட்டில் நிகழ்வது போன்றே பிள்ளை வீட்டாருக்கும் 'திகையாமல்' தொடர்கதையாக இருப்பதைத் தெரிந்து குரூர திருப்தியுடன் தனது கடைசி துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி விட்டார் பெண்ணின் தந்தை.

- " பிள்ளையின் தந்தை முகத்தில் வெடித்த வேர்வையை ஒற்றிக் கொண்டார். பிள்ளையின் தாய் ஒரு மௌனத்திற்குப் பிறகு, " சரி பத்தாயிரமாக் குடுங்கோ. உங்க பையன் படிப்புக்கு உதவி செய்யறோம் " என்றாள்.

பேரம் மேலும் இருபுறமும் மாட்டுத் தாவணி பேரமாக வலுக்கிறது . (கரங்களில் மறைப்புத்துணி சுற்றாத குறைதான்.)

பெண்ணின் தாய் நம்பிக்கையுடன், நாகலிங்க மரத்தின் பூக்களை எண்ணிக் கொண்டிருக்கும், மகளைப் பார்க்கிறாள். எதிராளியின் பலவீனம் இந்த அப்பாவி அம்மாவுக்கு 'பேரம் படியும்' நம்பிக்கையாகத் தோன்றுகிறது.

### *6. வாழ்வியல் வேறு, தொன்மம் வேறு*

ஊழியர் சம்பளப் பேச்சு வார்த்தைகளில் கம்பெனிகள் தமது எதிர்பார்ப்பை தொழிற்சங்கங்கள் முன் எதிர்க் கோரிக்கைகளாக (counter-demands) வைப்பது போல , மகனின் படிப்பு உதவிக் கோரிக்கையைக் கைவிட்டு ஏழாயிரத்தை மூவாயிரமாகக் குறைக்கும் எதிர்க் கோரிக்கையைப் பிள்ளை வீட்டார் முன் வைக்கிறார் பிருந்தாவின் தந்தை . தமது பெண்ணின் அழகை அவராகவே சிலாகிக்க , 'மாநிறம்' என்று எள்ளலாகப்பதில் எழ , மகாபாரதம் வருணிக்கும் திரௌபதியின் நிறம் கறுப்புத்தான் என்று கூறி 'எங்க பிருந்தாவுக்கு ஒவ்வொரு ஃபீச்சரும் வச்சுப் பண்ணின மாதிரி என்ன நேர்த்தி ! ' என்று கூறி ரூ . 2,500 குறைக்குமாறு பெண்ணின் தந்தை மீண்டும் கோரிக்கை வைக்கிறார் . திரௌபதிக்கு நிஜ சமூகத்தில் மதிப்பில்லை.

### *7. பெண் மொழி*

மணப் பெண் தனது ஒரே மகிழ்ச்சியான சுற்றுச்சூழல் உலகில் ரசனையுடன் நாகலிங்கப்பூ அழகை வருணித்தவாறு குறிப்பால் உணர்த்துகிறாள்:

- "நாகலிங்கப்பூ எத்தனை அழகு தெரியுமோ ?" பிருந்தாவின் குரல் இடைவெட்டிக் கொண்டு வந்தது. தெருவில் போறவாளெல்லாம் இந்த வீட்டையேதான் பார்த்துண்டு போறா . பத்தில் ஒருத்தர் உள்ளே வந்து 'பூஜைக்கு நாலு நாகலிங்கப் பூ தரமுடியுமா 'ன்னு கேக்காம போறதில்லே. சிவ பூஜைக்கு ரொம்ப எடுத்ததாமே இது ! இதுவே லிங்கம்தானே! இதையே

வச்சுக் கூட பூஜை பண்ணலாம் . எங்கம்மா தினமும் பூஜை பண்ணுவா , உங்களுக்குத் தெரியுமோ? இல்லேம்மா? சிவனுக்கு மட்டுமில்லே, எல்லாத் தெய்வப் படங்களுக்கும் இந்த பூவைப் போடுவா . கும்.முனு ரூம் பூராவுமே வாசனையும் இருக்கும் . கேட்டுக்குள் நுழையறப்பவே இந்த மரத்திலேர்ந்து உங்களுக்குக் கூட வாசனை மூக்கைத் துளைச்சிருக்குமே? ஆனா வாடிப் போய்ட்டா அடுத்த நாள் நாத்தம் சகிக்காது . இதழ்களும் தொட்டாலே கழண்டுண்ட மாதிரி பொத்து பொத்துனு விழுந்துடும் . ஆனா புதுசா இருக்கிறபோது அத்தனை அழகு. ... நாகலிங்கப் பூதான் அபூர்வம்!" ...

என்று பேசிக் கொண்டே செல்கிறாள் பிருந்தா. பெண்மையின் ஏக்கத்தை அழுத்தமாக உரக்கப் பேசுகிறது.

பெண்ணின் அழகில் தன்னை மறந்து , இன்னும் ரெண்டாயிரம் ஆகக் குறைக்கச் சொல்லி மீண்டும் பிள்ளையின் காலைப்பார்த்தார் பெண்ணின் தந்தை.

பிள்ளையின் தாய் வெடுக்கென்று பேசினாள் . *"என்ன இருந்தாலும் அவன் ஆம்பிளை . ஆம்பிளை எப்படி இருந்தா என்ன?..."*

விடுவாரா பெண்ணின் தகப்பனார் ? பிருந்தாவின் தோழி செட்டியார்ப்பெண் மீனாட்சி கொடுத்த நைலக்ஸ் ஜார்ஜெட் புடவைகட்டி வரச் சொல்கிறார் . அமர இருந்தவளை வேண்டுமென்றே இல்லாத பாக்குப் பொட்டலத்தை எடுத்து வரச் சொல்லி நடப்பவளைக் கண் கொட்டாமல் பார்க்கும் பிள்ளையை ஓரக் கண்ணால் பார்க்கிறார்.

***8. பெண் பார்க்கும் படலப் பிரச்சினை***

பெண் ஊனமில்லை என்பதற்காக நடந்து காட்டச் சொல்வது , ஊமையில்லை என்பதை உறுதிசெய்ய பாடச்சொல்வது போன்ற அவலங்கள் மாப்பிள்ளை வீட்டார் பண்ணி வரும் அலங்கோலங்கள். ஏற்கனவே பாக்குப் பொட்டலத்தை வாயில் போட்டுக்கொண்டதை மறந்தது போன்று நடித்து 'நீங்கள் கேட்காவிட்டாலும் பெண்ணை நடக்கச் செய்வோம் ' என்பதாக உடல் ஊனமுற்ற மாப்பிள்ளையை குறிப்பால் சுட்டுகிறார் பெண்ணின் தந்தை . யதார்த்தம் உறுத்தவே , மீண்டும் இரண்டாயிரம் குறைக்கும் கெஞ்சலில் ஈடுபடுகிறார் . 'சம்பந்தம் வேண்டாம் ' என்று தீர்மானிக்கும் நிலையில் , மாப்பிள்ளை இளகியபடி. "ஐயாயிரம் செய்யுங்கோ, போறும்" என்கிறான். இதை 'உளறலாக' எடுத்துக் கொண்டு திடுக்கிடும் தமது பெற்றோருடன் விவாதித்து 'கல்யாணம் பண்ணப் போகிறவன் நான் ' என்று சண்டையிடுகிறான் . ஒருவழியாக இரண்டாயிரம் குறைப்பது என்று முடிவாகி , எந்தெந்த வகைகளில் குறைக்கலாம் என்ற ஒப்புதலுடன் வரன் பார்த்தல் ஒப்புக்கு நிறைவடைகிறது . இருதரப்பிலும் மனம் காயப் பட்டதுதான் மிச்சம் . நடந்து முடிந்த களேபரத்தால் களைத்துப் போன பெண்ணின் தந்தை மனம் நொந்தபடி பூங்காவிற்கு நடை பயிலச் செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு ஓடி மறைகிறார் . இது எல்லாவற்றையும் கணக்கில் கொள்ளாமல் நாகலிங்கப் பூக்களின் எண்ணிக்கையிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்த பிருந்தாவிற்கு 'இருந்தாற்போலிருந்து மரத்தில் பூக்கள் மறைந்து ஒரு டஜன் நொண்டிக் கால்கள் தெரிந்தன ' என்று கதையை முடிக்கிறார்

சூடாமணி. (கதை எழுதப்பட்ட கால கட்டத்தில் நொண்டி , ஊமை, செவிடு, குருடு உள்ளிட்ட சொல்லாடல்கள் இப்போதையது போன்று 'மாற்றுத் திறனாளி ' என்பதாக பண்பட்ட சொல்லாகப் பயன்படுத்தப் படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.)

### *9. முடிவுரை*

'பெரியாழ்வார் பெற்றெடுத்த பைந்தொடி ஆண்டாள் ' பேசுவது போன்ற வாஞ்சை கொண்ட பிருந்தாவின் பாத்திரப் படைப்பு வழியாக பிராமண சமூகத்தை அறிவுறுத்துகிறார் பிராமண வகுப்பில் பிறந்த எழுத்தாளர் சூடாமணி . பாரதியின் புதுமைப் பெண்ணைக் கொண்டாடும் சமூகம் ஏன் நிஜவாழ்க்கையில் பெண்ணை விலைபேசுகிறது ? என்று நாமும் சிந்திக்க வேண்டி வருகிறது . நடுத்தர வர்க்கத்தின் வாழ்வியலைப் பேசும் இக்கதை, வேட்டை சமூகத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த பெண்கள் எவ்வாறு காலப் போக்கில் அடிமைகளாகினர் ? பெண்களை உடைமையாக்கிக் கொண்ட ஆணாதிக்க சமூகம் சொத்துரிமை வழங்க ஏன் நாள் பார்க்கிறது என்று நீட்சியாகத் தொடர்ந்து கேள்விகள் எழுப்புகிறது.

### *தொகுப்புரை*

1. வரதட்சிணைப் பேரம் திருமணத்தின் ஆதாரகளமாகத்தொடங்கி மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடையே ரணகளமாக நிகழும்போது , நாகலிங்கப்பூவைக் குறியீடாகக் கொண்டு இதமான பெண் மொழி பேசுகிறாள் ஏழ்மை நிலையிலுள்ள மணப் பெண் பிருந்தா.
2. வலது கால் ஊனமாக இருந்தாலும் மன ஊனமின்றி அவளை மணக்கத் துடிக்கிறான் மாப்பிள்ளை. இயல்பாக முகிழ்க்க வேண்டிய மணவுறவு வியாபாரப் பேரமாகி தடைப்படும் நிலையில் மணமகனின் நெகிழ்வான பண்பு காரணமாக கைகூடுகிறது ; ஆனாலும் இணக்கமற்ற சூழல் எதிர்காலச் சிக்கல்களையும் புதைத்துக் கொண்டு நிற்கிறது.
3. சென்ற நூற்றாண்டின் அறுபது எழுபதுகளின் காலகட்டத்தைச் சுட்டினாலும் திருமண வரதட்சிணை நிலையில் சமகாலத்தில் பெரிதாக மாற்றமில்லை ; உயர்தட்டு நடுத்தர வர்க்கத்திலிருந்து இடைப்பட்ட , தாழ்த்தப்பட்ட பிரிவுகள் வரை வரதட்சிணை விசுவரூபம் கொண்டு வியாபித்து நிற்கிறது.
4. பெண்கல்வியில் முன்னேற்றம் உண்டு . அரசுப் பள்ளிகள் , அரசுக் கல்லூரிகள் , அரசுப் பல்கலைக்கழகங்கள் இதற்கான உள்கட்டமைப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
5. பொருளாதாரச் சூழலைச் சமாளிக்க ஆணாதிக்கச் சமூகம் குறுக்கு வழிகளில் முயல்கிறது . பெண் வீட்டார் என்றென்றும் அடிமட்டத்திலேயே உழலுகின்றனர்.
6. சமகாலத்தில் மண முறிவுகள் மணமான சிறிது காலத்திலேயே ஏற்படும் அன்பற்ற உலகமாகி விட்டது. பொருளாதாரமே இதன் அடிப்படை.

### *துணைநூற்பட்டியல்*

1. ***பிரேமா, இரா பெண்ணியம்: அகலமும் ஆழமும், காவ்யா வெளியீடு, காவ்யா, 16 இரண்டாம் குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600024, முதல் பதிப்பு: 2015.***

2. *வெண்ணிலா, அ. ( தொ.ஆ. ), மீதமிருக்கும் சொற்கள்: பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் (1930-2014), அகநி வெளியீடு, 3 பாடசாலை வீதி, அம்மையப்பட்டு, வந்தவாசி - 604 408, முதல் பதிப்பு: அக்டோபர் 2014.*

3. *Ebenezer Cobham Brewer/ Ivor H Evans, The Wordsworth Dictionary of Phrase & Fable, Wordsworth Reference, Wordsworth Editions Ltd, Cumberland House, Crib Street, Ware, Hertfordshire SG12 9ET, UK, 1995*.